# ஈழத்து சிற்றிலக்கியங்களின் மரபு

செல்வி. செ.சிவசுப்பிரமணியம்

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கிய வரலாற்றில் இலக்கியங்களை பேரிலக்கியம், சிற்றிலக்கியம் எனப்பாகுபடுத்தும் மரபு காணப்படுகின்றது. பேரிலக்கியம் தவிர்ந்த மற்றைய இலக்கியங்களை சிற்றிலக்கியம் எனக் கொள்ளலாம். அந்த வகையில் ஈழத்தில் எழுந்த சிற்றிலக்கியங்கள் எவை எனவும் அவை எழுந்தமைக்கான காரணங்கள் அவற்றின் இயல்புகள் எவை என்பன இக்கட்டுரையிலே விபரமாகக் கூறப்படுகின்றன.*

**0.1 தோற்றுவாய்**

இவ்வாய்வு ஈழத்திலே எழுந்த சிற்றிலக்கிய வகைகளின் மரபு பற்றி நோக்குவதாக அமைகின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கியம் சங்ககாலத்தில் இருந்து வளர்ந்து வருவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். ஈழத்துப் பூதந்தேவனாரைத் தொடர்புபடுத்தி சங்க காலத்திலிருந்தே ஈழத் தமிழ் இலக்கிய வரலாறு தொடங்குகின்றது என்ற மரபைத் தோற்று வித்திருக்கின்றோம். இவ்வாறான வரலாற்றைத் தெளிவாக இனம் காண்பதற்கு வாய்ப்பு எமக்குக் கிடைக்கவில்லை. 14ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை ஈழத்திலே எழுந்த சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தி மதிப்பீடு செய்யும் முயற்சியாகவே இவ்வாய்வு அமைகின்றது.

**0.2 சிற்றிலக்கியம் பற்றிய வரை விலக்கணம்:**

ஈழத்திலே எழுந்த இலக்கியங்களை பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என இரு வகையாக நோக்கலாம். இப்பாகுபாடு தனித் தமிழ் இயக்கம் வலுவடைந்த காலத்தில் வழக்கில் வந்தனவாக இருக்கலாம். பிரபந்தம் என்னும் வட்மொழிச் சொல்லே இன்று சிற்றிலக்கியம் என்னும் பொருளில் வழங்கப் படுகின்றது.[1] பிரபந்தம் என்பதற்குத் 'தொண்ணூற்றாறு வகைப்பட்ட நூல் இசையுரு கட்டுரை' எனப்பொருள் கூறுகிறது தமிழ்ப்பேரகராதி. பிரபந்தம் தொண்ணூற்றாறு வகைப்படும் என்ற மரபினை பட்டியல் நூல் குறிப்பிடுகின்றது. வளரும் தமிழ் இலக்கியத்தைத் தொண்ணூற்றாறு என்ற வரையறைக்குள் நிறுத்திவிட இயலாது. அது வளர்ந்து செல்லும் இயல்புடையது.

**பிரபந்தமரபியல்**

'பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற்றாறெனும் தொகையதான'[2]

புராணத்தையும் பிரபந்தமாகக் கூறக் காணலாம். மேலும் பெருங்காப்பியம், காப்பியம் என்பவற்றையும் பாட்டியல் நூல்கள் பிரபந்த மாகக் கருதுகின்றன. இந்த இடத்திலே பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்பதன் விளக்கமும் வேறுபாடும் உணரப்படுவது அவசிய மாகின்றது. காவியம், புராணம், இதிகாசம் என்பவை பேரிலக்கியம் என்ற வகையில் அடங்குவனவாகும். பேரிலக்கியம் புராணம், காவியம், இதிகாசம்) தவிர்ந்த இலக்கியங் களைச் சிற்றிலக்கியம் என்றே கருதலாம்.

**வரலாறு பேசும் இலக்கியங்கள்**

வையாபாடல், கைலாயமாலை
கோணேசர் கல்வெட்டு,
யாழ்ப்பாண வைபவமாலை

**அறிவியல் பேசும் இலக்கியங்கள்**

சரசோதிமாலை
செகராசசேகரமாலை
பரராசசேகரம், செகராசசேகரம்
அமுதாகரம்

**மானுடம் பேசும் இலக்கியங்கள்**

கரவைவேலன் கோவை,
தண்டிகைக் கனகராயன் பள்ளு
பஞ்சவண்ணத்தூது
கிள்ளைவிடுதூது
சித்திரவேலாயுதர் காதல்
கல்வளையந்தி, மறைசையந்தாதி

**தெய்வத்தன்மை பேசும் இலக்கியங்கள்**

ஞானப்பள்ளு பறாளை
விநாயகர் பள்ளு
கதிரமலைப்பள்ளு
சிவகாமியம்மை துதி
புலியூரந்தாதி, காசியந்தாதி
மாலையந்தாதி
இணுவையந்தாதி
நகுலம்மைக்குறவஞ்சி
வீரபத்திரர் ஊஞ்சல்
பிள்ளையார் கதை,
வீரபத்திரர் கதை

**0.3 ஈழத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களின் பாகுபாடு**

ஈழத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். வரலாறு பேசும் இலக்கியங்கள், அறிவியல் சார்ந்த இலக்கியங்கள், மானிடம் பேசும் இலக்கியங்கள், தெய்வத்தின் புகழ்பாடும் இலக்கியங்கள் என நான்காக வகுக்கலாம். அவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்திக் காட்டலாம்.

**0.4 ஈழத்துச் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றதற்கான காரணிகள்: (வழுவமும், தேவையும்)**

ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்ட காலப் பகுதியிலேதான் வரலாற்றுணர்வு ஏற்படு கின்றது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் தமது நிலைப்பாடு பற்றிச் சிந்திக்கின்ற பொழுதுதான் வரலாறு தோன்றும். வரலாற்றை ஆவணப் படுத்த வேண்டும் என்ற சிந்தனையில் உருவானவையே இவ்வரலாற்று இலக்கியங்கள் எனலாம்.

அறிவியல் சார்ந்த இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கு ஆரியச் சக்கரவர்த் திகளின் ஆட்சியும் ஒரு காரணமாகும். செகராச சேகரன், பரராசசேகரன் என்ற பட்டப் பெயர் களை ஒருவர் பின் ஒருவராக சூடிக் கொண்டு சில ஆண்டுகளாக சிங்கைநகரிலே ஆண்ட மன்னர்களின் பெயராலேயே சோதிட வைத்திய நூல்களின் பெயர் அமைகின்றமையும் இவ் உண்மையை நிலைநாட்டுகிறது. சோதிடம் வைத்தியம், கணிதம் புவியியல் சார்ந்த அறிவும்

அதேவேளை தமிழ்புலமையும் மன்னர்களின் ஆதரவும் இவ்விலக்கியங்கள் தோற்றம் பெறக் காரணங்கள் ஆயின. மேலும் வடமொழிக்கல்வி ஈழத்தில் தமிழர், சிங்களவர் மத்தியில் செல்வாக்குப் பெற்றதும் ஒரு காரணம்.

சமய உணர்வும் இலக்கியம் தோற்றம் பெறுவதற்கு ஒரு காரணமாகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலிருந்தே சைவசமய இலக்கியங்கள் தோற்றம் பெற்றதைக் காணலாம். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் மக்கள் சமய வாழ்க்கையிலும் கோயில் வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டனர். போர்த்துக்கேயர் ஆட்சி மக்கள் தம் மதத்தைப் பேணவும் பரப்பவும் வாய்ப்பளிக் காதபோதும் மக்கள் சைவமயத்தைப் பேணியும் பாதுகாத்தும் வந்தமை குறிப்பிடத் தக்கது. ஆரியச்சக்கரவர்த்திகள் கட்டிய கோயில்கள் போன்று ஒல்லாந்தர் காலத்திலும் பல கோயில்கள் கட்டப்பட்டன. இதனால் மக்கள் பூசை முறையினையும் வழிபாட்டு மரபினையும் பேணி வந்தனர். இப்பேணுகை சமய இலக்கியங்களைப் பேணுவதாகவும் அமைந்தது. இதனால் கோயில்களில் படித்துப்பயன் சொல்லும் இலக்கியங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாகவே பிள்ளையார் கதை முதலிய இலக்கியங்கள் தோன்றின. (சமயப் பரம்பல் இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாகின்றது. சாதாரண மக்களுக்குக் கருத்துக்கள் இலகுவில் சென்றடையக் கூடிய இலக்கிய வடிவங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாகவே அறிஞர்கள் கோயிலையும் இறைவனையும் மையமாக வைத்து சமய உண்மைகளை உணர்த்துவதற்கு பள்ளு, அந்தாதி, அகவல், வெண்பா, பதிகம், ஊஞ்சல் முதலிய இலக்கிய வடிவங்களைக் கையாண் டனர். தமிழகத்தில் சிலப்பதிகாரக் காலத்தி லிருந்தே ஊஞ்சம் மரபு இருந்து வருகிறது. ஈழத்தில் தேர்த்திருவிழா, திருக் கல்யாணம் என்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது தான் ஊஞ்சல் பாட்டுப் பாடப்படுவது வழமை. ஈழத்தில் திருவிழா மரபே ஊஞ்சல் பாட்டு தோன்றுவத ற்கும் காரணமாகின்றது. சைவ சமயம் தூய்மையுடன் வளர்வதற்கு இச்சிற்றிலக்ய வடிவங்கள் பேருதவியாக அமைந்தன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கி லேயரது ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ சமயம் மக்களிடையே பரப்பப்பட்டது. சாதாரண மக்களுக்கு நாட்டார் வடிவில் அமையும் பாடல்கள் வாயிலாகவே கிறிஸ்தவ மதத்தினைப் பரப்பலாம் என்ற கருத்தினைக் கிறிஸ்தவ மதத்தினர் கொண்டிருந்தனர். இதன் விளை வாகவே அம்மானை, பள்ளு என்ற இலக்கிய வடிவங்களை சமயப் பரம்பலுக்கும் சமயப் பேணுகைக்கும் கருவியாகப் பயன்படுத்தினர். இக்கருத்தினைக் கூறும் போது பேராசிரியர் கா. சிவத்தம்பி போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தினையும், ஒல்லாந்தர் இறப்பிள மாது (Reformed Church) என வழங்கப்பெறும் ஒல்லாந்தப் புரட்டஸ்தாந்தக் கிறிஸ்தவத்தி னையும் பரப்பினர். இவ்வாறு பரப்பும் பொழுது தமிழ் இலக்கியப் பாரம் பரியத்தின் சிற்றிலக்கிய வடிவங்களாகப் போற்றப்பெறும் அடிநிலை மக்கள் தொடர் புடைய இலக்கிய வடிவங்களைக் கையாண்டுள்ளனர் எனும் உண்மையை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும்' என்ற கருத்து இதனை வலுப்படுத்துவதாகவே அமைகின்றது. கஞ்சன் காவியம். திருச்செல்வர் காவியம் என்பன எழுந்த பிற்பாடு கஞ்சனம் அம்மானை, திருச்செல்வர் அம்மனை என்ற சிற்றிலக்கிய வடிவங்கள் எழுந்தன. கற்றவர்களுக்குக்

காவியமும் கல்லாத அடிநிலை மக்களுக்கு அம்மானை என்ற வடிவமும் பயன்பட்டதையே இவ்விலக்கிய வடிவங்களின் தோற்றம் சுட்டுகிறது எனலாம்.

பழைய மரபுகளைப் பேணும் வகையிலும் பழைய வடிவங்களைக் கையாளும் வகையிலும் புலவர்கள் இலக்கியம் படைத்தனர். ஈழத்தில் சிறந்த கல்வி மரபு பேணப்பட்டமையும் பழைய வடிவங்கள் பேணப்படுவதற்குக் காரண மாகலாம். இவ்வகையான மரபுகளை யாழ்ப்பாண த்துப் பிரதேசத்தின் பிரபுத்துவ முறையையும் இணைக்கும் முயற்சியின் விளைவாகவே கரவை வேலன் கோவை தோற்றம் பெற்றது.

## 0.5 ஈழத்துச் சிற்றிலக்கியங்களின் பொது இயல்புகள்

### 5.1 பள்ளு

உழத்திப் பாட்டு என்று வழங்கிய வடிவ நிலையின் ஒரு வளர்ச்சியாகவே பின்னாளில் பள்ளு இலக்கியம் கருதப்பட்டது. உழத்தி என்ற பெண்பாற் பெயராற் பெயர்பெற்ற உழத்திப் பாட்டு காலவளர்ச்சியில் சாதியின் பெயரைப் பெறுகின்றது. பள்ளு இலக்கியங்களின் பெயர் பொதுவாகப் பாட்டுடைத் தலைவன் பெயராலோ அல்லது அவனது வாழ்பதியினாலோ அல்லது அவனது பண்பினாலோ தான் அமைவது மரபாகும். கதிரைமலை என்ற வாழ்பதியிலே எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது பாடப் பட்டதால் இப்பெயர் பெறுகின்றது. பறாளை விநாயகர் பள்ளு பறைளை என்னும் தலத்தில் எழுந்தருயிருக்கும் இறைவன் மீது பாடப் பட்டதாகும். இதுவும் இறைவன் வாழ்பதியி னாலே தான் இப்பெயர் பெறுகின்றது. ஞானப்பள்ளு கிறிஸ்து நாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அமைவது. கிறிஸ்து நாதரே ஞானவடிவானவர் என்ற அவரது பண்பினால் இவ்விலக்கியம் ஞானப் பள்ளு என்ற பெயரைப் பெற்று அமைகின்றது. இதற்கு மாறாக தண்டிகைக் கனகராயன் பள்ளு என்ற இலக்கியத்தின் பெயர் கனகநாயக முதலியின் சந்ததியினனான கனகராயன் பெயரால் அமைவது நோக்கத்தக்கது. பள்ளுப் பிரபந்த த்தின் இலக்கணங்கள் இந்நான்கு நூலிலும் அமைந்துள்ளதைக் காணலாம். மேலும் கனகராயன் பள்ளிலே பாடுடைத் தலைவனது உற்றார் உறவினர் ஆகிய பலரும் புகழப்பட்டு ள்ளனர். பாட்டுடைத் தலைவனையும் அவனது குடும்பத்தையும் தவிர ஏனையோரைப் புகழ்ந்து பேசுதல் பள்ளுப் பிரபந்த மரபு அன்று. இந்தவகையிலே கனகராயன் பள்ளு மரபுக்கு மாறாக பள்ளு இலக்கியத்திற்குப் புதுமை சேர்துள்ளதைக் காணலாம்.

### 5.2 அம்மானை

அம்மானை என்ற இலக்கிய வடிவத்தின் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் கூற வில்லை. தொடர்நிலைச் செய்யுள் கலம்பகம், பிள்ளைக்கவி என்பனவற்றின் ஒரு உறுப் பாகவே அம்மானை பயிலப்பட்டது. கால வளர்ச்சியில் அம்மானை என்ற வடிவம் தனி இலக்கிய வடிவம் ஆகும் தன்மையைக் காண்கின்றோம். கஞ்சன் அம்மானை, திருச்செல்வர் அம்மானை, அர்ச்ச யாகப்பர் அம்மானை என்ற இலக்கிய ஆக்கங்களில் அம்மானை என்ற வடிவம் தனி இலக்கியமாக வளர்ச்சியுற்றதைக் காட்டுகின்றது. இவ்விலக்கி யங்கள் கல்லாதோரும் இலகுவில் விளங்கக் கூடியனவாக அமைந்திருப்பது ஒரு செய்தி திரும்பத்திருப்ப அழுத்திக் கூறப்படுவதும் தனிச் சிறப்பான அம்சங்களாக விளங்குகின்றன.

அம்மானை என்பது தாய் என்ற பொருளை உடையது என்றும், பெண்களை அம்மா என்று அழைப்பது போல அம்மானை என்றழைப்பது இலக்கிய மரபென்றும் பாட்டின் இறுதியிற் பெண்கள் விளிக்கும் விளியாக அம்மானை என்பது அமைந்ததென்றும் அவ்வாறு அம்மானை இறுதியுடன் வரும் பாட்டுக்களே அம்மானை என்று பெயர் பெற்றன என்றும் சிலர் கொள்வர்.[4] என பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதே போன்று இவ்விலக்கிய ஆக்கங்களிலும் அம்மானை என்ற சொல் பல தாழிசை அடிகளுக்கும் பின் ஓரடியின் முடிவில் செய்யுளின் இடையிலோ அல்லது முடிவிலோ காணப்படுகின்றது. அதுவே இவ் விலக்கியங்களை அம்மானை இலக்கிய ஆக்கம் என எண்ண வைக்கிறது.

### 5.3 சித்திரவேலாயுதர் காதல்

மரபு ரீதியாக வழங்கும் பிரபந்த வகைகளுள்ளே காதல் என்ற இலக்கிய வகை தனியாகக் கூறப்படவில்லை. பிரபந்தமரபில் பவனிக் காதல் என்ற இலக்கிய வகை கூறப்படுகின்றது. இது உலாவுடன் சம்பந்தப்பட்டதாகவே கருதப்பட்டது. பெயர் சுட்டாப் பாக்களே அகத்திணைக்குரியன. தொல்காப்பியர் பெயர் சுட்டாத செய்யுட்களே அகத்திணைக் குரியது எனக் கூறுவது இங்கு நோக்கத்தக்கது.[5] சித்திரவேலாயுதர் காதலில் தலைவன் தலைவி (வாலமுத்து) பெயரும் கூறப்படுகின்றது. அகப்பொருள் இலக்கிய மரபினின்று விலகிச் செல்வதைக் காணலாம். தலைவிக்குத் தலைவன் மேலுண்டாகும் மோகத்தினால் ஏற்படும் மனவேறுபாட்டைப் பேய் பிசாசுகளினால் ஏற்பட்டதாகக் கருதுவது அகத்திணை இலக்கிய மரபாகும். இத்தகைய பண்பினை இவ்விலக்கியமும் சுட்டத்தவறவில்லை.

### 5.4 கோவை

கோவை இலக்கியத்திற்குரிய இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. கோவையென்பது களவு, கற்பு என்னும் இரண்டையும் கூறி, அகத்திணை பொருந்தப் பெற்று கலித்துறையால் நானூறு பாட்டால் பாடப்படுவது[6] எனப் பன்னிரு பாட்டியல் இலக்கணம் கூறுகின்றது. இவ்விலக்கணத்தை மையப் படுத்தி கரவெட்டி வேலாயுதபிள்ளையை பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட அகப்பொருள் இலக்கிய ஆக்கம் கரவை வேலன் கோவை, பிரபுத்துவமுறையின் ஆட்சியினையும் அதன் புகழினையும் சொல்ல எழுந்த இலக்கியம் ஆகும். இவ்விலக்கியம் 425 செய்யுட்களைக் கொண்டு அமைகின்றது. 400 என்ற பாடல் தொகையில் அமைவதே கோவை என்ற இலக்கிய வகையின் பொதுப்பண்பாகும். இக்கோவை அப்பண் பினின்று விலகி நிற்கும் தன்மையைக் காணலாம். இதனைத் தவிர மற்றைய கோவைக்குரிய இலக்கணங்கள் பொருந்திக் கட்டளைக்கலித்துறையால் அமையப் பாடப்பட்டதாக அமைவதும் குறிப்பிடத்தக்கது.

### 5.5 ஊஞ்சல்

ஈழத்தில் எழுந்த இலக்கிய வடிவங்களுள் ஊஞ்சல் பெரும் எண்ணிக்கையில் எழுந்துள்ளன. ஊஞ்சல் இலக்கியத்தின் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றன. ஈழத்தில் எழுந்த பத்திர காளியம்மன் ஊஞ்சல் போன்றவை திருவிழாக் காலங்களில் பாடப்படுவதாகும். இதில் அம்மானை, வீரபத்திரரை ஊஞ்சலில் இருத்தி ஆடீர் ஊஞ்சல் என ஆட்டப்படுவது வழக்க

மாகும். சிலப்பதிகாரத்திலும், திருவாசகம், திருப்பொன்னுஞ்சலிலும் இடம் பெறும் ஊஞ்சல்களில் பெண்களே ஊஞ்சலில் அமர்ந்து ஆடுவதும் பாடுவதுமாக அமைத்துள்ளது நோக்குதற்குரியது.

"ஆரா அமுதின் அருள்தான் இணை பாடிப் போரார்வேல் கண் மடவீர் பொன் னூசல் ஆடாமோ"

ஆனால் ஈழத்து ஊஞ்சலில் தெய்வம் ஆடுவதும் பாடுவதும் ஆக அமைந்தது நோக்குதற்குரியது.

### 5.6 தூது

தூது என்ற வடிவத்தினைப் பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றன. தமிழ்நாட்டிலே தூது விடும் மரபு தனிப்பாடல்களிலும் நாயன் மார் பதிகங்களிலும், காவியங்களிலும் இடம் பெற்று கால வளர்ச்சியில் தனியான இலக்கிய ஆக்கமாக வளர்ச்சியடைந்ததைக் காணலாம். குருநாதசுவாமி மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி அவன்மேல் உண்டான விருப்பினை கிளி வாயிலாகச் சொல்லியனுப்பு வதாக அமைந்தது கிள்ளை விடுதூது. குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது, அஃறிணைப் பொருளைத் தூதாகவிடும் மரபினைப் பின்பற்றுவதாகவும் அதேவேளை இலக்கண நூல்கள் கூறும் கலிவெண்பாவி னால் பாடும் தன்மையும் பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. அகத்திணை இலக்கணம், சுட்டும் தலைவன், தலைவி பெயர் சுட்டாத மரபை மீறிச் செல்வதையும் காணலாம். கையிலை நாதன் மேல் விருப்புற்ற பெண்ணொருத்தி ஐந்து பொருள்களை தூது அனுப்புவதை பள்ளு விடுதூது காட்டுகிறது. ஒரு பொருளையே தூது அனுப்புவது மரபு. ஆனால் இங்கு மரபு மீறப்பட்டு புதுமை சேர்க்கப்படுகிறது. இது கலிவெண் பாவினால் பாடப்பட்டது. அகவல் விருத்தம் என்ற யாப்பு வடிவினைக் கொண்டமைகின்றது. அகத்திணை மரபுக்கு மாறாகத் தலைவன் தலைவி பெயர் சுட்டியமைவதைக் காணலாம்.

### 6.0 சிற்றிலக்கிய மரபுக்குள் அடங்காத இலக்கியங்கள்

வரலாற்று நூல்களும் சோதிட வைத்திய நூல்களும் இவ்வகையில் அடங்குவனவாகும். இவற்றைப் பேரிலக்கியம் எனவும் கொள்ள வியலாது. வைத்திய நூல்களான பரராசசேகரம், செகராசசேகரம் என்பன பாடல் தொகை யளவில் பரந்து செல்கின்றதும் குறிப்பிடத் தக்கது. இவை பிரபந்த மரபினுள் அடங்கு வனவும் அல்ல. இவற்றையும் சிற்றிலக்கிய வகைக்குள்ளே பொருத்திப் பார்க்க வேண்டியது அவசியமாகின்றது.

### 6.1 கோணேசர் கல்வெட்டு

தமிழில் இலக்கண நூல்கள் தோன்றிய பின்பே கல்வெட்டுத் தோன்றியதாகும். கல்வெட்டுக்களில் காணப்படும் மெய்க்கீர்த்தி வடிவங்களைப் பற்றிப் பாட்டியல் நூல்கள் வர்ணிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. கல்வெட்டு என்பது இலக்கிய வகையைச் சார்ந்ததாகும். அந்தியேட்டிக் கிரியைகள் முடிந்த பின்பு சபையோர் முன்னாக இறந்த வர்களைப் பற்றிப் பாடும் வழக்கம் இலங்கையிலே நெடுங்காலமாக நிலவி வருகின்றது. இத்தகைய பாடல்களும் கல் வெட்டு என்றே கூறப்படு கின்றது. 'சாசன வாசகங்களை அடிப்படை யாகக் கொண்டெழுந்த இலக்கியங்களையும் கல்வெட்டு எனக் குறிப்பிடும் வழக்கம் இலங்கையில் ஏற்பட்டிரு ந்தமைக்குக் கோணேசர் என்னும் நூல் ஓர் எடுத்துக் காட்டாகும்"[8] எனக் குறிப்பிடுவது இங்கு பொருத்தமாகவே அமைகின்றது. திருகோண

மலைப் பிரதேசத்தின் மண் வளத்தினையும் திருத்தலத்தின் மகிமையையும் வரலாற்று உணர்வோடு பதிந்த ஆவணமே கோணேசர் கல்வெட்டாகும், திருகோணமலைப் பிரதேச த்தின் பிரதேச உணர்வும் மண் வாசனையும் இவ் விலக்கியத்தினூடாகப் புலப் படுகின்றது. இக்கல்வெட்டு செய்யுள் நடையிலும் அதேநேரம் உரைநடையிலும் அமைந்த முறைமை குறிப்பிடத் தக்கது. ஐம்பத்தாறு செய்யுட்கள் ஆசிரியப்பா வினால் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கிய மரபிலே காணப்பட்ட ஆசிரியப்பா என்ற யாப்பு வடிவினை இக்கல் வெட்டு ஆசிரியர் பயன்படுத்தியமை இலக்கியத் தன்மையை வெளிப்படுத்துவதாகும்.

### 6.2 வையாபாடல்

பன்னிருபாடியல் பாட்டு (பத்துப்பாட்டு) இன் இலக்கணத்தையே குறிப்பிடப்படுகின்றது. ஏனைய பாட்டியல் இலக்கணங்கள் பாட்டு, பாடல் என்பதன் இலக்கணத்தைக் குறிப் பிடவில்லை. பாட்டு, பாடல் என்பன ஒரு பொருளில் தான் பயிலப்படுகின்றன. ஆனால் இவற்றிடையே சிறு வேறுபாடு அமைந்துள்ளது நோக்குதற்குரியது. பா என்னும் அடிச் சொல்லிலிருந்து பாடு என்ற வினைச்சொல்லும் அதில் இருந்து பாட்டு என்ற பெயர்ச்சொல்லும் பாட்டு என்ற சொல்லிலிருந்து பாடல் என்ற தொழிற்பெயர்ச் சொல்லும் தோன்றின. பாட்டு என்பது நேரடியாகப் பாடக்கூடியது (இந்த இடத்திலே 10 பாட்டு என்பது ஒரு காலத்தில் வாய் மொழிப் பாடலாக இருந்திருக்கலாம் என்பதை எண்ணத் தூண்டுகின்றது). பாடல் என்ற சொல் ஏற்கனவே பாடப்பட்டது அல்லது எழுத்திலே எழுதப்பட்டது என்ற பொருளிலே அமைகின்றது. இவ்விடத்திலே வையாபாடல் என்ற நூலின் தலைப்பில் வரும் பாடல் என்பது எழுத்திலே எழுதப்பட்டது என்ற பொருளையே தருவதாகும். இலங்கையரசன் குலங்களையும் குடிகள் வந்து குடியேறிய முறைமையினையும் ஆவணப் படுத்தும் நூலாகும்.

### 6.3 கைலாயமாலை

பாட்டியல் நூல்கள் மாலையைத் தனியாகக் கூறிவில்லை. ஆனால் இரட்டை மணிமாலை, மும்மணிமாலை என்பனவற்றைக் குறிப்பிடு கின்றன. மாலை என்பது பொருள் ஊடு பொருளாகச் செல்லும் பொழுது சொற்களால் தொடுக்கப்படுவது. நல்லூரிலே சிங்கையாரின் கைலாயநாதர் கோயிலைக் கட்டிப் பிரதிஷ்டை செய்த வரலாற்றை மாலையாகச் சொற்களால் தொடுக்கப்பட்டது. 310 கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பா யாப்பினால் ஆக்கப்பட்டது. ஆனால் இலக்கிய மரபிலே வந்த மாலையாக இதனைக் கொள்ள முடியவில்லை.

### 6.4 வைத்திய சோதிட இலக்கியங்கள்

செகராசசேகரம், பரராசசேகரம் என்ற வைத்திய நூல்கள் வடமொழியில் அமைந்த ஆயுள்வேத நூல்களைத் தழுவி அமைக் கப்பட்டன என்பது அவற்றின் ஆரம்பச் செய்யுட்களின் வாயிலாக அறியும் செய்தியாகும். செகராசசேகரம் நோயின் குணத்தையும் அதற்கு உரிய மருந்தும் கூறும் நூலாகும். செகராசசேகரம் அந்தாதித்தொடை அமைந்த விருத்த யாப்பாக அமைந்துள்ளது. பரராசசேகரம், செகராசசேகரத்தில் கூறப்படாத செய்திகளையும் ஒருங்கே திரட்டித் தருவதாகும். பரராசசேகரத்தில்அமைந்த செய்யுட்களில் பெரும்பாலானவை விருத்தப்பாவாலும், சில செய்யுட்கள் ஆசிரியப்பா, கலிவெண்பா வினாலும் அமைந்தவையாகும். செகராச சேகரம், பரராசசேகரம், செகராசசேகரமாலை என்பன சோதிடம், வைத்தியம் கூறும்

நூல்களாக இருந்த போதும் இலக்கியச் செழுமை பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. சரசோதிமாலை, செகராசசேகர மாலை என்பனவும் மாலை இலக்கிய வடிவத்தைச் சேர்த்துப் பெயரிட்டுள்ள முறைமை இலக்கியத் தன்மையைப் பேண விளைந்தமையைக் காட்டுகின்றது. செகராசசேகரமாலை படலங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது நோக்குதற்கு ரியது. மன்னனின் புகழ் சோதிட வைத்திய நூல்களில் பேசப்படுகின்றது. வைத்திய மருந்து பற்றிக் கூறும் போது அறக் கருத்துக்களையும் உதாரணம் காட்டிச் செல்லும் விதம் குறிப்பிடத் தக்கது. திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், என்ற நூல்களுடன் இவ் இலக்கியங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டியன.

**தொகுப்புரை:**

தமிழ்நாட்டிலே 13ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு கம்பர். திருத்தக்கதேவர் போன்ற பெருங்கவிஞர்களும் பேரிலக்கியங்களும் எழவாய்ப்பில்லாமல் போகின்றது. இவ் வேளையில் பொதுமக்களையும் இறைவனையும் முதன்மைப்படுத்திப் பாடும் சிற்றிலக்கியங்கள் எழுந்தன. இந்தத் தாக்கம் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினையும் பாதிப்பதாகவே அமைகின்றது.

ஈழத்திலும் ஆரம்பகால இலக்கியங்கள் பேரிலக்கியங்களாக அமைகின்றன. (புராணம், காவியம்) கற்றவர்களை மையப்படுத்தியும் மொழிபெயர்ப்பு முயற்சியினையும் உபாயமாகக் கொண்டமையே காரணமாகும். பொதுமக்களை மையப்படுத்தி அவர்களுக்கு சமயத்தினையும் மானுடத்தினையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் எழுந்தவையே சிற்றிலக்கி யங்கள் ஆகும். ஈழத்துச் சிற்றிலக்கி யங்களின் யாப்பழகு விதந்து குறிப்பிடத்தக்கது. பழமை யான செய்யுள் இலக்கிய பாரம்பரியத்தை சிற்றில க்கியங்கள் பின்பற்றி நிற்பது குறிப்பிடத் தக்கது.

வரலாறு எழுதவேணும் என்ற சிந்தனை உருவாக்கத்தில் எழுந்த வரலாற்று நூல்கள் வரலாற்று நூல் அமைப்புப் பற்றிய அறிவும் முன்னோடிகளின் அனுபவமும் இல்லாத சூழ்நிலையில் எழுந்தவையாகும். இந்த வரலாற்று நூலகள் எழாவிட்டால் வடமாகாண சரித்தரமே அழிந்திருக்கும். அந்த வகையிலே ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே இவற்றின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது.

19ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டு மன்னர்கள் சோதிட, வைத்தியம் என்ற அறிவியல் துறைகளில் கவனம் செலுத்தாமை நோக்குதற்குரியது. ஆனால் ஈழத்தவர்களுக்கு சோதிட வைத்தியத்துறை சார்ந்த அறிவியல் நோக்கு ஏழு நூற்றாண்டு பாரம்பரியமுடையது. "'கண்டிரசன்'தேவிக்கு ஏற்பட்ட வயிற்றுநோயை அங்குள்ள வைத்தியர்களாலே தீர்க்க முடியாது போக ஆரியச் சக்கரவர்த்திகள் குலத்தனான பரநிருபசிங்கனை அழைததுத் தீர்த்ததாகக் கூறுகிறது".[9] (யாழ்ப்பாணவைபவமாலை) எனவே ஈழத்து வைத்திய மரபு இலக்கிய மரபு என்பன தமிழ்நாட்டிற்கு வழிகாட்டியாகவும் துணை புரிவனவாகவும் அமைந்தமை நோக்குதற்குரியது.

ஈழத்திலே எழுந்த பள்ளு இலக்கிய ங்களுள் ஒன்றான கதிரமலைப்பள்ளு என்ற இலக்கியமே முதல் தோன்றியதாகும். இந்தியா விலும் முக்கூடற்பள்ளு, வையாபுரிப் பள்ளு என்ற பள்ளு இலக்கியங்கள் தோன்றின. அவற்றிற்

கெல்லாம் கதிரமலைப்பள்ளு இலக்கியமே முன்னோடியாக அமைந்தது எனப் பேராசிரியர் நா.சுப்பிரமணிம் போன்ற ஆய்வாளர்கள் சுட்டமுற்பட்டுள்ளனர். மேலும் இவ் விடயம் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

பள்ளு இலக்கியங்களின் ஊடாகப் பிரதேச உணர்வு வெளிப்படுகின்றது. பள்ளு இலக் கணத்திற்கு மாறாக கனகராயன் பள்ளிலே நாட்டு வளம் கூறப்பட்டு கனகராயன் கிளை வளமும் கூறப்படுகின்றது. மேலும் தெல்லிப் பளை, மயிலிட்டி, இருபாலை என்ற ஊர்களின் வாழ்த்தும் அமைவது நோக்குதற்குரியது. கதிரைமலைப் பள்ளிலே ஈழநாட்டின் வளத்தைக் கூறும் போது மழைமுகில் சூழ்ந்த மலைகள், மகாவலிகங்கை, இரத்தினக்கற்கள், மாணி க்கக்கற்கள், பொழில், தானம், தவம் ஆகியன சிறந்து விளங்கும் நாடாக வர்ணிக்கப்பட்டு ள்ளது.

சிற்றிலக்கியங்கள் பொதுமக்களையும் கடவுளரையும் மையமாக வைத்து எழுதப் படுவதே மரபாகும். இலகுவான பாட்டு வகைகளையும் சேரி மொழிகளையும், பேச்சு வழக்கு சொற் பிரயோகங்களையும் ஈழத்துச் சிற்றிலக்கியங்கள் கொண்டுள்ளன. உதாரணமாக வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் இடம் பெறும் அவதிப்படாதை, போகாதை, சொல்லாதை, கொள்ளாதை, மபேலிகங்கை (மகாவலிகங்கை) போன்ற சொற்பிரயோகங்களை ஆசிரியர் கையாளு கின்றார். ஈழத்து இலக்கியங்களில் இடம்பெறும் சொற்பிரயோகங்கள் மொழியியல் ஆய்வாளர் களுக்குப் பேருதவியாக அமைவனவாகும்.

## அடிக்குறிப்புகள்

1. முத்து சண்முகன், நிர்மலா மோகன்; 1979, சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும், முத்துப் பதிப்பகம், மதுரை, ப.04
2. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1975, பிரபந்தமரபியல் சென்னை ப.21.
3. சிவத்தம்பி கா; 1978, 'ஈழத்தில் தமிழ் இலக்கியம் நாவல் நூற்றாண்டு விழா நினைவு வெளியீடு, முதற்பதிப்பு, ப.20
4. வித்தியானந்தன், சு; 1970, கஞ்சன் அம்மானை, பதிப்பு, பேராதனை, ப.6
5. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையில் பாரி நிலையம், சென்னை, 1961, சூத்திரம் 57.
6. சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், 1943 பன்னிருபாட்டியல், சென்னை , ப. 220
7. மாணிக்கவாசகர், திருவாசகம், திருப் பொன்னூசல்
8. பத்மநாதன்,சி; 1993, கோணேசர் கல்வெட்டு. இந்த சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, ப.4
9. மயில்வாகனப்புலவர்; 1953, யாழ்ப்பாண வைபவமாலை, சரஸ்வதி புத்தகசாலை, கொழும்பு, பக் .57.